செ.வெ.எண்: 331/2016 நாள்: 06.06.2016

பத்திரிகை செய்தி

# கன்னியாகுமரி மாவட்டத்தில்
# பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுதி நடத்த உரிமம் பெறுதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுதிகளை உடனடியாக பதிவு செய்யுமாறு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தொண்டு நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள், பள்ளியுடன் சேர்ந்த விடுதிகள் மற்றும் குழந்தைகள் இல்லங்களை, தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 பிரிவு 5 மற்றும் 8 ன் கீழ் பதிவு செய்து மாவட்ட ஆட்சியரின் உரிமம் பெறுதல் வேண்டும். இதனை பின்பற்றாத விடுதிகள் மற்றும் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் சம்மந்தப்பட்ட நிர்வாகிகள் மீது இச்சட்ட பிரிவு 20 ன் கீழ் காவல்துறையின் மூலம் வழக்குப்பதிவு செய்யப்பட்டு 2 ஆண்டுகாலம் சிறைத்தண்டனையும் ரூ.50,000/- அபராதமும் விதிக்கப்படும்.

அதன் பின்னரும் பதிவு செய்யப்படவில்லை எனில் இரண்டாவது முறையாக வழக்குப்பிவு செய்யப்படும் பட்சத்தில் 3 ஆண்டுகாலம் தண்டனை மற்றும் ரூபாய் ஒரு லட்சம் அபராதம் விதிக்கப்படும். எனவே இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்வது குறித்த விவரங்கள் அறிவதற்கும், விண்ணப்பங்கள் பெறுவதற்கும் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இல்லங்கள், விடுதிகள் மற்றும் பள்ளியுடன் சேர்ந்த விடுதிகள் நடத்துவோர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 3-வது தளம், நாகர்கோவில்-1, தொலைபேசி எண்: 04652-278980 என்ற முகவரியிலும், 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் விடுதிகள் நடத்துவோர் மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், ஜோசப் கான்வென்ட் எதிரில், பழைய தாலுகா அலுவலகம், நாகர்கோவில்-1, தொலைபேசி எண்: 04652-278404 என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.